**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16ம் நாள் புதன்கிழமை

**IA.No.01/2024 in OS.No.86/2022**

**(TNTM03000194/2022)**

1. ஷாக்கிரா
2. இம்ரான் ... மனுதாரர்கள்/4 மற்றும் 5ம் பிரதிவாதிகள்

/எதிராக/

காதர் பாஷா ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 01.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணேஷ்,M.B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சந்திரசேகரன்,M.A.,B.L., திரு.C.சண்முகம்,M.A., B.L., ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரகளுக்கு எதிராக 16.09.2022ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் 2ம் மனுதாரர் அசல் வழக்கில் 5ம் பிரதிவாதி ஆவேன். மேற்படி வழக்கில் 16.09.2022 அன்று மனுதாரர்கள்/4, 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை நோய் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே நாட்டு வைத்தியம் எடுத்துக்கொண்டதால், நீதிமன்றத்தில் 16.09.2022 தேதியன்று ஆஜராக முடியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல. தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணம். எனவே 16.09.2022 அன்று மனுதாரகளுக்கெதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3**. எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர்களின் மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் இந்த

எதிர்மனுதாரர் கடுமையாக மறுக்கின்றார். ஆட்சேபிக்கின்றார். இந்த மனுவிற்கு எந்த முகாந்திரமும், அடிப்படையும் கிடையாது. எதிர்மனுதாரருக்கு வீண் அலைக்கழிப்பையும், பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்த வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவானது எடுப்பிலேயே தள்ளுபடி செய்வதற்குரியதாகும். மனுதாரர்கள்/4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் கடந்த 16.09.2022 அன்று ஆஜராகாததினால் அவர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து மேற்படி மனுதாரர்களை அசல் வழக்கில் மீண்டும் தரப்பினராக சேர்க்கவேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படியும், நியாப்படியும் செல்லத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். மேலும் மனுதாரர்களின் மனுவில் கண்ட அனைத்து சங்கதிகளும் மோசவிதமானவை. அவற்றை இந்த எதிர்மனுதாரர் கடுமையாக முற்றிலுமாக மறுக்கின்றார். ஆட்சேபிக்கின்றார்.

4. மனுதாரர்களின் நிரூபணவாக்கு மூலத்தில் கூறப்பட்டுள்ளவை ஜோடிப்பானவை, அவற்றை நிரூபிக்க மனுதாரர்கள் எந்த விதமான சான்றுகளும் அற்று தாக்கல் செய்துள்ளார்கள். இம்மனுவினை தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு தொல்லைகள் அளிக்கவேண்டும் என்று தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தில் பொய்யுரைத்து மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்களின் நிரூபணவாக்குமூலத்தில் 1ம் பத்தியில் 2ம் மனுதாரர் சார்பாகமட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 1ம் மனுதாரர் குறித்து எந்த தகவலும் இந்த நிரூபணவாக்குமூலத்தில் காணப்படவில்லை. மேலும் நிரூபணவாக்குமூலத்தில் 2ம் பத்தியில் " I state that I was bed ridden due to Viral fever and jaundice and taking native treatment and I unable to move about and unable to appear before this Honouable Court on 16.09.2022" என்று 2ம் மனுதாரர் கூறியுள்ளார். 1ம் மனுதாரர் ஏன் ஆஜராகவில்லை என்பது குறித்து எந்த ஒரு காரணமும் இல்லை.

5. மனுதாரர்களின் மனு மற்றும் நிரூபணவாக்கு மூலத்தில் எந்த ஒரு இடத்திலும் 1ம் மனுதாரர் குறித்து எந்த ஒரு தகவலும் இல்லை, 1ம் மனுதாரர் கனம் கோர்ட்டில் ஆஜராகாததிற்கான எந்த ஒரு காரணமும் குறிப்பிடவில்லை. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள பொய்யான சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும். கனம் கோர்ட்டில் பொய்யான தகவல்களை கூறியும், 1ம் மனுதாரர் ஆஜராகாதது குறித்து எந்த தகவலும் குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ள மனுதாரர்களின் மனுவானது தள்ளுபடி செய்யக்கூடியது ஆகும். மனுதாரர்களின் மனுவானது உள்ளந்தரங்கமான நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவினை விசாரணைக்கு கனம் கோர்ட் உத்திரவிடுமேயாயின் மனுதாரரை விசாரணைக்கு உட்படுத்த அனுமதி வேண்டப்படுகின்றது. மனுதாரரின் மனுவானது எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலையும், பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்த வேண்டி தேவையற்று தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. ஆதலின் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

7. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

8. <u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கின் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 16.09.2022ம் தேதி எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லை என்பதாலும், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதியான இம்மனுவின் 2ம் மனுதாருக்கு வைரஸ் காய்ச்சல் மற்றும் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டிருந்தது என்றும், மஞ்சள் காமாலைக்கு நாட்டு வைத்தியம் செய்து வந்ததாகவும் அதனால் 16.09.2022ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுவை அனுமதித்து மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 1ம் மனுதாருக்காக சேர்த்து இம்மனு தாக்கல் செய்திருப்பதாக விவரம் எதுவும் இல்லை. 1ம் மனுதாரர் அசல் வழக்கில் 16.09.2022ல் ஏன் ஆஜராகவில்லை என்பதற்கு காரணம் எதுவும் இம்மனுவில் குறிப்பிடவில்லை. அசல் வழக்கை காலம் கடத்த வேண்டியும், எதிர்மனுதாருக்கு வீண் அலைச்சலையும் பொருளாதார நட்டத்தையும் ஏற்படுத்த தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. அசல் வழக்கானது பாக பிரிவினை பரிகாரம் கேட்டு எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலம் அசல் வழக்கில் ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் 16.09.2022ம் தேதி மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவுடன் 5ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் 2ம் மனுதாருக்கு உடல்நிலை சரியில்லாததால் 16.09.2022ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. மேற்டி காரணத்தை உறுதிப்படுத்தும் விதமாக மனுதாரர்கள் தரப்பில் மருத்துவ சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்க்கும்படி இல்லை என்றாலும், அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவும்

தங்கள் தரப்பு எதிர் வழக்கை முன்னிலைப்படுத்தவும் ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியில் பால் அமையும் என்று இந்நீமன்றம் கருதுகிறது.

11.எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் செய்யும்போது இம்மனுவின் 1ம் மனுதாரர் 16.09.2022 தேதியன்று அசல் வழக்கில் ஆஜராகாதது குறித்து எவ்வித காரணமும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், 1ம் மனுதாரர் குறித்து இம்மனுவில் எந்த ஒரு தகவலும் இல்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதம் ஏற்கும் வகையில் இருந்தாலும் அசல் வழக்கில் உள்ள சொத்து சம்மந்தமான பிரச்சனைக்கு முழுமையாக தீர்வு காண்பதற்கு இந்த மனுதாரர்கள் அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. பாகப் பிரிவினை வழக்கு என்பதால் இந்த மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 16.09.2022 தேதியிட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய சுமார் ஒரு வருடத்திற்கு பிறகு தாக்கல் செய்திருப்பதால் இம்மனுவை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள், எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.2,000/—த்தை வருகின்ற 23.07.2025க்குள் செலுத்தவேண்டும் என்றும் தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க வாய்தா 24.07.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.07.16 16:25:15 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:—</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:—</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.07.16 16:25:27 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.